*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

***Case No**.: **CC** .160/2021*

*Deposition of Witness for Prosecuting **PW**-2 (**LW**-3)*

*Name / Father's Name:* **திரு.பிரசாந்த் த/பெ. ரமேஷ்**

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.06.2023*

**முதல் விசாரணை**

1) நான் தற்போது பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள நெய்குப்பை கிராமத்தில் வசித்து, சலூான் கடை வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 11.09.2020 அன்று விடியற்காலை 05.30 மணியளவில் நானும், திருவேஷ் என்பவரும் அவரது இருசக்கர வாகனத்தில் வலசக்கல்பட்டியிலுள்ள ஏரிக்கரையில் குழிப்பதற்காக சென்றோம்.

2) குழித்துவிட்டு வரும்பொழுது, தம்மம்பட்டி-கெங்கவல்லி மெயின்ரோட்டில் வலசக்கல்பட்டி பிரிவுரோட்டில் வந்துகொண்டிருந்தபொழுது நான் இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்தேன். அப்பொழுது எங்களுக்கு எதிரே வந்த **TN** 48 **AQ** 4775 என்ற பதிவெண்கொண்ட மாருதி கார் வந்து, எங்கள்மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது.

3) அந்த விபத்தில் எனக்கு இடதுகால், முகம், கழுத்து, ஆகிய இடங்களில் அடிபட்டுவிட்டது. காலில் எலும்புமுறிவு ஏற்பட்டது. கழுத்தில் இரத்தக்காயம் ஏற்பட்டு, 15 தையல்கள் போடப்பட்டுள்ளன. திருவேஷ்-க்கு பலத்த காயம் ஏற்பட்டது. எங்கள் இருவரையும் ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கும், அங்கிருந்து சேலம் அரசு மருத்துவமனைக்கும் சிகிச்சைக்காக கூட்டிச்சென்றார்கள்.

4) திருவேஷ் சிகிச்சைபலனின்றி இறந்துவிட்டார். நடந்த சம்பவம் பற்றி போலிசார், என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) சம்பவம் நடந்த சமயத்தில் என்னுடைய வயது என்னவென்றால் 25 வயது

ஆகும். எனக்கு இருசக்கர வாகனம் ஓட்ட ஓட்டுனர் உரிமம் உள்ளதா என்றால் இல்லை. விபத்து நடந்த சமயத்தில் நானும், திருவேஷ்-ம் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரிதான்.

2) தலைக்கவசம் அணிந்திருந்தால் எனக்கு தலையிலும், கழுத்திலும் காயம் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. எங்கள் ஊரிலிருந்து, வலசக்கல்பட்டி ஏரிக்கு எவ்வளவு தூரம் என்றால் தெரியவில்லை, சுமார் 11.30 மணியளவில் ஏரிக்கரைக்கு சென்றுவிட்டோம்.

3) எங்களுடன் வேறு யாரும் ஏரிக்கரைக்கு வந்தார்களா என்றால் நண்பர்கள் மேலும் 3 இருசக்கர வாகனங்களில் உடன் வந்திருந்தார்கள். எந்தெந்த இருசக்கரவாகனங்களில் சென்றீர்கள் என்றால் நான் யுனிகார்ன் பைக்கிலும், மற்றவர்கள் பேசன்புரோ, பல்சர், பல்சர் 250 ஆகிய வாகனங்களிலும் சென்றோம்.

4) நான் ரோட்டின் இடதுபுறமும், விபத்து ஏற்படுத்திய கார் ரோட்டின் வலதுபுறமும்தான் வந்ததா என்றால் ஆமாம். சம்பவம் நடந்த இடம் வளைவான ரோடு என்றால் சரிதான்.

5) ரோட்டின் வலதுபுறம் முறையாக சென்ற எதிரியின் காரின்மீது, நான்தான் அதிவேகமாக இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்று மோதிவிட்டேன் என்றால் சரியல்ல. எதிரியின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றும், இருசக்கர வாகன ஓட்டுனர் உரிமம் இல்லாமல் ரோட்டின் வலதுபுறமாக ஏறிச்சென்று இருசக்கரவாகனத்தை நான்தான் எதிரியின் காரின்மீது மோதி விபத்தினை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல.

6) விபத்தில் இறந்த திருவேஷ் அவர்களுக்கும், எனக்கும் இழப்பீடு பெறவேண்டி எதிரியின் கவனக்குறைவால் விபத்து நடந்ததாக சொல்லி பொய்யான புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், நடந்த விபத்திற்கும், எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

ஒம்/-S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.